# உவமை நயங்களால் சிறக்கும் கவியரசர்கண்ணதாசனின் மாங்கனி

தே.சண்முகம் & முனைவர் ஆ.அருள்தாசு
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
விழுப்புரம் - 605 602.

77

**ஆய்வுச் சுருக்கம்**

சங்கம் மருவிய காலந்தொட்டேஇ சிலப்பதிகாரம்இ சீவகசிந்தாமணிஇ சூளாமணிஇ கம்பராமாயணம்இ வில்லிபாரதம்இ பெரியபுராணம் போன்ற காப்பியங்கள் தமிழ்மொழியைச் செழுமைபடுத்தியிருக்கின்றன. அவ்வகையில் கவியரசர் அவர்களும்; காப்பியம் செய்யும் ஆர்வத்துடன் மாங்கனியைப் பாடியுள்ளார். உவமை நயங்களால் ‘மாங்கனி’ காப்பியம் எவ்வாறு சிறப்புற விளங்குகிறது என்பதை அறியமுயல்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நம்மிடம் இயல்பாக அமைந்துள்ள பண்பாகும். தெரிந்தவற்றைக் கொண்டு தெரியாதவற்றை விளக்குவது உவமை ஆகும். கேட்பவரின் மனத்தை ஈர்க்கும் வகையிலும் சொல்வதை எளிதில் உணரும் வகையிலும் கூற உவமைகளைப் பயன்படுத்தினார். கவியரசு கண்ணதாசனின் மாங்கனி காவியம் சிறப்புறுவதற்கு இதில் அமைந்துள்ள உவமை நலன்கள் எவ்வாறு முக்கியக் காரணியாக உள்ளது என்பது குறித்து ஆராய்வோம்.

**உவமை - இலக்கணம்**

வினைஇ பயன்இ வடிவம்இ நிறம் என்ற நான்கின் அடிப்படையில் உவமைகள் தோன்றும் என்பார் தொல்காப்பியர்.

“வினை பயன் மெய்இ உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்”(தொல்காப்பியம். 1222)

என்பது தொல்காப்பிய நூற்பா.

**கண்ணதாசனின் கவிதை நலன்கள்**

கண்ணதாசன் படைப்புகள்இ வாசகர்கள் படித்த உடனேயே அவர்களின் மனத்திற்குள் சென்று சிம்மாசனமிட்டு அமர்ந்து கொள்ளும். அவருடைய கவிதைகளில் உள்ள சொல்லாட்சி சந்த இசைநயம்இ வளமான கற்பனைகள்இ புதுமையான மொழிநடைஇ சங்க இலக்கியம்இ இடைக்கால இலக்கியம் இவற்றின் புலமையால் வந்த செழுமையானத் தமிழ்நடை ஆகியனவே இதற்குக் காரணம். பெருமிதமும்இ காதல் உணர்வும்இ நகைச்சுவையும் சோகமும் இழையோடும் நடையழகு ஆகியன இயல்பாக அமையப் பெற்றவை கண்ணதாசனின் படைப்புகள்.

**கண்ணதாசனின் மாங்கனி**

கண்ணதாசனின் மாங்கனியை ஒரு வரலாற்றுச் சான்று கொண்ட பகுதியை எடுத்துப் புதுவிதமாகப் பாடியிருக்கிறார். காதல் வாழ்வில் ஏற்படும் பிரிவுத் துன்பத்தையும் காதல் கைக்கூடாமல் இருக்கும் நேரத்தில் ஏற்படும் மன உணர்வுகளின் வெளிப்பாட்டினையும் நன்றாக எடுத்துச் சொல்கிறது இக்காப்பியம்.

மாங்கனியில் பல சிறப்பான உவமைகள் கையாளப்பட்டுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களின் தாக்கமும் காணப்படுகின்றது. தமிழ் மொழியின் சிறப்புக் கூறுகளும் கூறப்பட்டுள்ளன. இவை காப்பியத்திற்குச் சிறப்பினைச் சேர்க்கின்றன.

**மாங்கனியில் உவமைகள்**

‘மாங்கனி’ காவியம் முழுவதும் பலவகையான உவமைகளைக் கையாண்டுள்ளார் கண்ணதாசன். ஒரு பொருளின் தன்மையைப் பறைசாற்றவும்இ ஆடவர்இ பெண்டிரின் அழகினைப் பற்றி விளக்கிடவும்இ

கதை மாந்தர்களின் இன்ப துன்பங்களை வெளிப்படுத்தவும்இ இயற்கை எழிலை வெளிக் கொணரவும் எனப் பல இடங்களில் உவமைகள் மாங்கனி முழுவதும் மிளிர்கின்றன.

**ஆண் பெண் - நடை**

ஆண்கள் வலிமையான உறுதி வாய்ந்த உடலமைப்பினைக் கொண்டவர்கள். அதனால் அவர்களை மலைக்கு உவமையாகவும்இ அவர்களின் நடையினைச் சிம்மத்திற்கு உவமையாகவும் கூறியுள்ளார். அதேபோன்று பெண்கள் மென்மையானவர்கள் அவர்களின் நடை அன்னப்பறவையின் நடையைப் போன்று மென்மையானது என்பதையும்

“நடையினிலே ஆடவர்கள் சிம்மம் போலும்
நங்கையர்கள் அளந்து வைக்கும் அன்னம் போலும்”

என்று குறிப்பிடுகிறார்.

மாங்கனியின் அழகுநலம்

சேரன் அரசவைக்கு வந்த மாங்கனியைக் கண்டவர்கள் மின்னலைக் கண்டவுடன் கண்கட்டுவதைப் போல பார்த்தனர். அவைக்கு வந்த மாங்கனி தங்கத்தால் செய்யப்பட்ட சிலை போல் இருந்தாள் என்பதனைஇ

“மின்வெட்டுக் கண்கட்ட மேவினாற்போல
பொன்கட்டிச் சிலைபோல ஊர்ந்து வந்தாள்”

என்று பாடுகின்றார். மாங்கனியின் விரலுக்குச் செங்காந்தள் மலர் உவமையாகவும்இ சிரிப்புக்கு முல்லைப் பூ உவமையாகவும்இ அவளது நடைக்கு பசுக்கூட்டம் உவமையாகவும் கூறப்பட்டுள்ளன.

மாங்கனியின் நடனம்

“காற்றுக்கு முருங்கை மரம் ஆடல்போலும்
கடலுக்குள் இயற்கைமடி அசைத்தல் போலும்
நாற்றுக்குள் இளங்காற்று நடித்தல் போலும்
நல்லோர்தம் அவைகண்ணே நடனமிட்டாள்”

என மாங்கனியின் நடனச் சிறப்பை உவமைகள் மூலம் காட்சிப்படுத்துகிறார்மாங்கனியின் சிறப்பு வாய்ந்த நடனத்தைக் கண்ட அடலேறு ‘ஆனை அசைந்து ஆடுவதைப் போலே” முன்னும் பின்னும் அசைந்தபடி நின்றான் என்று உவமிக்கிறார்.

**அடலேறுவின் செயலால் விளைந்த உவமைகள்**

மாங்கனியின் வீட்டிற்குள் ஓசையின்றி நுழைந்த அடலேறுவைப் பார்த்து மாங்கனிஇ திருடனைப் போல் ஏன் வந்தீர்? பிரிந்திருந்த காதலியைப் பார்க்க வந்தவன் போல் எதற்கு வந்தீர் ? எனக் கேட்டாள். பின்னாளில் இருவரும் காதலர்களாக மாறுவோம் என்பதை அறியாத மாங்கனிஇ

“திறத்திருந்த வீட்டிற்குள் ஓசையின்றித்
திருடனைப் போல் நுழைந்தீரே”

என்று பாடுகின்றார்.

மேலும் அவனைப் பார்த்து அலட்சியமாக ஒரு சிரிப்பினை உதிர்த்தாள். அதுஇ

“வெள்ளிக்கா சொருபிடியைக் கீழே கொட்டி
விட்டதுபோல் அலட்சியமாய்ச் சிரித்து”

என்கிறார் கவிஞர். மாங்கனியின் பேச்சைக் கேட்ட அடலேறு தன் படுக்கையில் 'பாறைக்கல் பள்ளத்தில் விழுந்ததைப் போல்' விழுந்தான் என மொழிகிறார் கண்ணதாசன்.

அடலேறுவின் உள்ளம்

அடலேறுவின் செயலை எண்ணிப் பார்த்த மாங்கனி பார்க்க வந்தவன் என்னைக் கெடுத்துவிட எந்நேரம் ஆகும்? ஆனால் அவன் அதைச் செய்யவில்லை. இப்போது அவன் உள்ளம் புரிந்தது. தலையணையை அவனாக நினைத்துப் பேசினாள்.

"அமைச்சர் மைந்தன்
படமெடுத்த நாகம்போல் வந்திருந்தால்
கெடுத்துவிட எந்நேரம் ஆகும்"

அடலேறுவின் தோற்றம்

போர்களத்திற்குச் சென்ற அடலேறுவின் தோற்றம்

"அடங்காத பொலிகாளை உருவம் போலும்
அடலேறு செல்கிறான்"

காளையைப் போன்று இருந்தது அடலேறுவின் உருவத்தோற்றம் என இருந்ததென்று கூறுகின்றார் கண்ணதாசன்.

**காதலில் உவமை**

அடலேறுவும் மாங்கனியும் காதல் வயப்பட்டனர். பின்பு அங்கு நிகழ்ந்த நிகழ்வினை உவமையால் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர். மாங்கனியைக் கண்டுவிட்ட அடலேறுவின் மனம்இ மடைபேர்த்து விட்டாற்போல் அங்கும் இங்கும் அலை பாய்ந்தது.

"வண்டுவந்து மெல்ல மெல்லத் தேடி தேடி
மனம்பிடித்த மலர் தன்னில் அமர்தல் போல"

அடலேறுவின் கண்கள் மாங்கனியைச் சுற்றியே வந்தன. அவனது மனம் முழுவதும் அவளால் நிரம்பி வழிந்தது என்பதை உவமையால் புலப்படுத்துகிறார் கவிஞர்.

அடலேறும் மாங்கனியும் ஒன்றிப் போய் காதல் மொழி பேசி மகிழ்கின்றனர். இதனைஇ

"மறுவொன்றும் இல்லாதத் தந்தப் பேழை
வைரத்துப் புதைந்துள்ளத் தன்மை போலும்"

என்று உவமையின் மூலம் ஒருவரோடு ஒருவர் கொஞ்சி மகிழும் தன்மையை விளக்குகிறார். மாங்கனியின் அழகில் மயங்கி மனத்தைப் பறிகொடுத்து நிற்கிறான் அடலேறு. இந்நிலை அப்பொழுதே பிறந்தவன் போல் விழித்தான் என்று உவமிக்கப்பட்டுள்ளது.

காமமும்இ கள்ளும்

காதலையும் காமத்தையும் கண்ணதாசன் விளங்கும் விதம் புதுமையாக உள்ளது. காமத்தைக்இ குடத்தில் இருக்கும் மதுவைக் கிண்ணத்தில் ஊற்றி கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைப்பதைப் போல் காமத்தையும் சுவைக்கிறான் அடலேறு என்பதைஇ

"குடமதுவைக் கிண்ணத்தில்
கொட்டிக் குடிப்பது போல்"

என்ற உவமையால் எடுத்துரைக்கின்றார்.

மாங்கனியைக் காணாத அடலேறு

மாங்கனியைக் காணாத அடலேறுவின் நிலையினைக் கவியரசுஇ

"ஒளியிழந்த வானத்தின் மேனி போல
தூக்கத்தில் நடப்பது போலவும் நடந்து செல்கிறான்"

இவ்வாறு பேசுகிறார். இறுதிவரை காதலுக்காகவே வாழ்ந்து தனது இன்னுயிரைத் தியாகம் செய்பவனாகவே அடலேறு காணப்படுகிறான்.

**புதிய உவமை**

கண்ணதாசன் அவர்கள் இயல்பான உவமையையும் அழகாகப் பதிய வைக்கின்றார். ஒய்யார நடை நடக்கும் மகளிர் அன்றலர்ந்த மலர் மாலையன்ன உருவம் எனப் புது உவமை ஒன்றைத் தருகிறார்.

“மலர்ந்த பூவியில்
பக்குவமாய்க் கட்டிய மென்மாலையன்ன
உருவத்தில் ஒளிசிதறி அங்குமிங்கும்
ஒய்யார நடை நடந்தார் மாதரெல்லாம்”

என்கிறார். மாங்கனியின் உயிர் மாங்கனியிடம் இல்லை. அவள் காதலன் அடலேறுவிடம் தான் உள்ளது. எனவேஇ அவனைத் தேடி வந்து காணாத பொழுதுஇ ‘அவன் இல்லை’ என்று சொல்லாமல் உயிரில்லை என்கிறாள்.

இல்லாத ஒன்றை எதனுடன் உவமையாகக் கூறமுடியும்? ஆனால் கவிஞர் கண்ணதாசன் யாருமில்லாத கூடத்தை உவமிக்க முடியாதபடி உள்ளது என உவமைபோல் கூறுகிறார்.

“ஒருவரும் இல்லாக் கூடம்
உவமைக்கு நில்லாதாகி”

**இழி உவமை**

இழிவான செயல்களைச் செய்பவர்களை நாய்க்கு ஒப்பிட்டு பேசுவதைக் காணலாம்.

“தெருமுனை நாய்போல் இழுக்கச் செய்வேன்”

என்று பெண்களை அவமானப் படுத்தும் சில வீரர்களைச் சாடுகிறார். வெற்றி பெற்ற வீரர்கள் தோல்வியுற்ற நாட்டில் உள்ள பெண்களை அவமானப் படுத்துவதும்இ அவர்களின் கூந்தலை அறுக்க முற்படுவதும் முட்டாள்தனம். இச்செயலைக் கண்டு கோபமுற்ற அடலேறு தன் வீரர்களை ‘நாய்’ என்று பேசுகிறான்.

எவ்வகைப் பெண்கள் வேண்டாம்

போர்களத்தில் இருக்கும் அரசரையும் வீரர்களையும் உற்சாகப்படுத்திடஇ நடனமாடுவதற்கும் பாடல் பல பாடுவதற்கும் மங்கையரை அழைத்துச் செல்வர். அவ்வாறு அழைத்துவரும் வீரனைப் பார்த்து எவ்வாறான பெண்களை அழைத்து வரவேண்டும் என்பதற்குப் பறவையை உவமையாகக் கூறுகிறான்.

“நடையிலே வாத்துப் போலும்
நயக்குரல் காகம் போலும்”

பழைய சொல்லாட்சி – புதிய உவமை

உவமையை வடிவம் மாற்றிஇ புதிய முறையில் சொல்வது இவரது தனிச்சிறப்பு. நடனமாடும் மாங்கனியை வருணிக்கிறார். ‘வாள் போன்ற விழி’ என்பது பழமையான மரபு உவமை. ஆனால் கண்ணதாசன் சொல்லும் முறையில் சிறிய மாற்றம் செய்து இதைப் புதுமையாய்ப் பொலிய வைக்கிறார். விழியை வாளாக உருவகம் செய்துவிட்டு இமைக்கு வாளின் உறையை உவமையாகக் காட்டுகிறார்.

“கொலை வாளுக்கு உறைபோல விழிவாளுக்கு இமை”

என்கிறார்.

**முடிவுரை**

உவமைகளை விளக்குவதில் புதிய உத்திஇ புதிய உவமைகள்இ புதிய சொல்லாட்சி ஆகியவற்றைத் தம் காப்பியம் முழுக்க கவிஞர் தன் சோதனை முயற்சிகளை நிகழ்த்தியிருக்கிறார். காப்பியம் முழுமையிலும் கற்பிற்குஇ கலைக்குஇ அழகுக்கு என உவமைகளின் அணிவகுப்பு தொடர்கிறது. கவியரசு கண்ணதாசன் சங்க இலக்கிய நலன்களையும் இக்காப்பியத்தின் உவமைகளின் மூலம் அறியமுடிகின்றது. மாங்கனி

காவியம் சிறப்புறுவதற்கு இக்காவியம் முழுவதும் கவிஞர் கையாளும் உவமை நலன்களே காரணியாக அமைகின்றன என்பது வெள்ளிடை மலை.

**துணை நின்ற நூல்கள்**

1. மாங்கனி – முத்தமிழ் காப்பியம்

2. தொல்காப்பியம்